அதிமேதகு மிசேலா பஸ்லெற் யெறியா
ஐ.நா மனித உரிமை ஆணையாளர்

அன்புடையீர்,

**தங்களது இலங்கை தொடர்பிலான மார்ச் 2019 அறிக்கை பற்றியது**

சிவில் சமூகக்குழுக்கள் ( குறிப்பாக இலங்கையின் வடக்கு -கிழக்கைச் சேர்ந்த அமைப்புக்கள் ) போரினால் பாதிக்கப்பட்டமக்களின் அமைப்புக்கள் மற்றும் ஏனைய ஒத்தகருத்துள்ள அமைப்புக்கள் மற்றும் நபர்களினால் இலங்கையில் தற்போது நிலவும் சூழல் தொடர்பாகவும், சமாதானம், நீதி தொடர்பிலான செயன்முறைகளில் முன்னேற்றம் இல்லாமலிருப்பது தொடர்பிலும் இக்கடிதத்தை வரைகிறோம். இக்கடிதத்திலுள்ள விடயங்களை எதிர்வரும் ஐ.நா மனிதஉரிமை அவையின் மார்ச் 2019 கூட்டத்தொடரில் நீங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளிடுவீர்கள் எனும் நோக்கில் இக்கடிதத்தை அனுப்பி வைக்கின்றோம்.

**பின்புலம்**

சிங்கள பௌத்த அரசியலில் ஊறித்திளைத்த அரசு தமிழர்களை நீண்டகாலமாக நசுக்கியதே இலங்கையின் யுத்தம் மூண்டமைக்கான காரணமாகும். 2009 இல் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் ஐ.நா மனிதஉரிமை செயலாளர் நாயகம் பாங்கி மூன் மூவர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை நியமித்தது. போரின் போது அமுலாகும் சர்வதேச சட்டத்தின் அனைத்து பரிமாணங்களையும் இலங்கையில் நடைபெற்ற யுத்தம் மீறியதாக அந்நிபுணர்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டது. அதனைத்தொடர்ந்து ஐ.நா மனிதஉரிமை அவை பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியது. மார்ச் 2014 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தொடர்ந்து ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தால் முழுமையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கையானது சர்வதேச நீதிபதிகள், வழக்கு தொடுநர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என வலியுறுத்தியது. 2015 இல் சனாதிபதி சிறிசேனாவும், பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும் ஆட்சி கட்டில் ஏற ஐ. நா மனித உரிமை அவையில் தீர்மானம் 30/1 இலங்கை அரசாங்கத்தின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் மாற்றங்கள் நிகழும் என்ற எதிர்பார்ப்பை மேற்படி நிகழ்வுகள் ஏற்படுத்தின. குறிப்பாக வெளிநாட்டுப் பங்குபற்றுதலுடன் சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தினால் முதற் தடவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றளவில் எதிர்பார்ப்புக்கள் உயர்வாக இருந்தன.

**நடந்தது என்ன?**

இலங்கை அரசாங்கம் மீளிணக்கம் சம்பந்தமாக ஓர் கலந்தாய்வு செயலணியை உருவாக்கியது. செயலணியின் பரிந்துரைகளில் சில முன்னேற்றகரமானவையாகவும் நியாயமான மாற்றத்தை நோக்கி நகரும் அரசாங்கத்திற்கு விருப்புண்டு என்ற எண்ணத்தை உண்டுபண்ணியது. குறிப்பாக பரிந்துரைகள் ஓர் கலப்பு பொறிமுறை

உருவாக்கத்தை வழிமொழிந்தது. எனினும் இவ்வறிக்கையானது அரசாங்கத்தினால் நிலைமாறுகாலநீதிப் பொறிமுறைகளை உருவாக்கும் செயன்முறைகளில் முற்றாகப் புறமொதுக்கப்பட்டது.

**காணாமல்போனோர் அலுவலகம்**

முதலாவதாக உருவாக்கப்பட்ட பொறிமுறை இதுவேயாகும். 2016 இல் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றின் மூலம் இவ்வலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வலுவலகம் 2018 இருந்தே அமுலுக்கு வந்தது. 2018 இல் ஆணையாளார்கள் நியமிக்கப்பட்டார்கள். காணாமல்போனோர் அலுவலகம் பல வழிகளில் தமிழ் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு ஏமாற்றத்தையே தந்தது. பாதுகாப்பு தரப்பிலிருந்து OMP யில் இருக்கும் ஒரு பிரதிநிதி இலங்கை இராணுவத்தின் முன்னாள் பணிப்பாளார் - யுத்தத்தின் இறுதி நாட்களில் அப் பதவிவகித்தவராவார். OMP வெறுமனே ஆட்களைத்தேடி அறிவதற்கான அலுவலகமாகவும் இழப்பீடுகளை வழங்கும் அலுவலகமாகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆனால் குற்ற நடவடிக்கைகள் தொடர்பில் OMP தான் சரியெனக்கருதினால் மாத்திரமே நடவடிக்கை எடுக்கலாம். அவ்வாறான குற்ற நடவடிக்கைகள் விசாரணையைப் பாரப்படுத்துவதற்கான விசேடவழக்கு தொடுனரை ஐ.நா மனித உரிமையின் பேரவையின் தீர்மானத்திற்கமைய நியமனம் செய்யப்படவில்லை. ஆகவே காணாமலாக்கிய குற்றத்திற்கான விசாரணைகள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறு இல்லை.அதேவேளை சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்ந்து ஆட்கொணர்வு மனுக்களில் பிரதிவாதிகளுக்கு - குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சார்பாக அவர்களை பாதுகாக்கும் வகையில் தோன்றி வருகிறது .ஒட்டு மொத்தத்தில் காணாமலாக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் வென்றெடுக்க தவறியுள்ளது. குறைந்தபட்சம் காணாமலாக்கப்பட்ட உறவுகள் மே 2009 இலும் அதற்கு முன்னரும் சரணடைந்தோர் பட்டியலையும் 1983 க்குப் பின்னர் கைது செய்து இலங்கையின் சிறைகளில் தடுக்கப்பட்டவர்களின் பெயர்களையும் வெளியிட சொல்லிக் கேட்டு வருவதையும் அரசாங்கம் செவிசாய்த்திருக்கலாம். அப்பட்டியல்களை வெளியிடுவதாக சனாதிபதி ஜீன் 2017 இல் உறுதியளித்தார். இன்று வரை அப்பட்டியல் வெளிவரவில்லை.

**இழப்பீட்டிற்கான அலுவலகம்**

இழப்பீட்டிற்கான அலுவலகம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் அலுவலகம் இன்னும் உருவாக்கப்படவில்லை அதற்கான காலவரையறையும் சொல்லப்படவில்லை. அலுவலகம் அமைச்சரவையின் முழுமையான கட்டுப்பாட்டில் இயங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக சுயாதீனமற்ற அலுவலகம் என்றும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

விசேட வழக்குத் தொடுத்தல் நியமனம், விசேட நீதித்துறை நியமனம் ஆகியனபற்றி இன்னும் பேசக்கூட ஆரம்பித்ததாக இல்லை. இவ்விசேட பொறிமுறைகளில் தீர்மானம் 30/1 இல் உறுதிமொழி வழங்கப்பட்டவாறு வெளிநாட்டு வழக்கு தொடுநார்களை, நீதிபதிகளை நியமிக்க மாட்டோம் என சனாதிபதியும், பிரதமரும் ,எதிர்க்கட்சித்தலைவரும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

இலங்கைக்கு 2015-2018 க்குமிடையே விஜயம் செய்த ஐ.நா விசேட அறிக்கையாளர்களின் அறிக்கைகள் அரசாங்கம் நீதி, சமாதான முன்னெடுப்பபுக்களில் அரசியல் விருப்பற்று

இயங்குவதை உறுதிப்படுத்துவதாக உள்ளன. காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான ஐ.நா வின் நடவடிக்கைக்குழு, சித்திரவதைக்கு எதிரான ஐ.நா குழு , பயங்கரவாத சட்டங்கள் தொடர்பிலான விசேட அறிக்கையாளர்களின் அறிக்கை அரசின் மேம்போக்கான செயற்பாடுகளை விமர்சித்துள்ளன. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாகவரும் தீவிரவாத நீதிக்கெதிரான சட்டமும் அதைப்போன்றே அல்லது அதைவிட மோசமான சட்டமாக அமையக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளமையையும் இவ்விடத்தில் குறிப்பிடலாம்.

**அரசியலமைப்பு செயன்முறை**-

தமது சுயநிர்ணய உரிமை வெளிப்படுத்தப்படும் வகையில் நிறுவனரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டாலன்றி நாம் இலங்கையில் பங்குதார்ர்களாக வாழ்வது கடினம் என்பதே தமிழர்களின் நிலைப்பாடாகும். இவ்விடயமானது நாட்டின் ஏனைய எண்ணிக்கையில் சிறிய சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனினும் அவர்களின் நிறுவனரீதியான கோரிக்கைகள் வித்தியாசமானவை.இந்நாட்டில் உள்ள வெவ்வேறு சமூகங்களிடம் உறையும் இறைமையை உள்வாங்கும் - சமஷ்டி அடிப்படையிலான, மதச் சார்பற்ற அரசை அரசின் மூல தத்துவமாக ஏற்றுக் கொள்ளும் - அரசியலமைப்பு சீர்திருத்தமே நாம் வேண்டுவது.

எமது கரிசனைகள் எமது அமைதிக்குறைவால் ஏற்பட்டவையல்ல. மெதுவான சரியான முன்னேற்றத்தைக்கூட நாம் வரவேற்போம். ஆனால் இலங்கை தற்போது பிழையான பாதையில் செல்வதாகவே நாம் கருதுகிறோம்.

**எமது எதிர்பார்ப்புக்கள்**

மேற்கூறியசூழலில் அதிமேன்மை தங்கிய தாங்கள் பின்வரும் நிகழ்ச்சிசார் தலையீடுகளை ஐ.நா மனிதஉரிமை பேரவையின் மார்ச் 2017 கூட்டத்தொடரிற்கு முன்மொழிய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

1) ஐ.நா மனித உரிமைபேரவையின் மார்ச்-2019 கூட்டத்தொடரிற்கு தாங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கையில் நீதியையும் பொறுப்புக்கூறலையும் சாத்தியப்படுத்த அவசியமான அரசியல் விருப்பு இலங்கை அரசிடம் இல்லை என்றும் எனவே ஐ.நா செயலாளர் நாயகம் ஊடாக உரியமுறையில், உரிய ஐ.நா அரங்கிற்கு இலங்கை விவகாரத்தை ஆற்றுப்படுத்ததும் பரிந்துரையை செய்தல்.

2)காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான ஐ.நா குழு இலங்கையை முழுமையாக விசாரணை செய்து எடுக்கப்படவேண்டிய அடுத்தகட்டநடவடிக்ககைகள் தொடர்பில் ஐ நா செயலாளருக்கு பரிந்துரைக்கவேண்டும்.

3) குறைந்தபட்சம் எதிர்வரும் கூட்டத்தொடரில் தீர்மானம் 30/1 முழுமையாக நிறைவேற்றப்படாமையைக் கண்டித்தும், ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் பொறிமுறைகள் உள்ள அடிப்படையான குறைபாடுகள் தீர்மானம் 30/1 இற்கு ஏற்றவாறு மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் ஏனைய பொறிமுறைகள்

உடனடியாக ஒரு கால அட்டவணைக்குட்பட்டு உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரும் புதிய தீர்மானத்திற்கும்

மேற்சொல்லப்பட்டவற்றை சாத்தியமாக்க

அ- இலங்கைக்கான விசேட ஐ.நா அறிக்கையாளரை நியமிக்க வேண்டும் என்ற பரிந்துரையையும்

ஆ- வடக்கு- கிழக்கில் நிலவரத்தைக்கண்காணிக்கவும் மேம்படுத்தவும் உறுததுணையாகவும் இருக்க ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கள அலுவலகம் ஒன்றை வடக்கு -கிழக்கில் நிறுவவேண்டும் என்ற முடிவும்

கீழ் கையொப்பமிட்டும் நாம் மேற்சொன்ன விடயங்களை இலங்கையில் சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டும் பொருட்டு கட்டாயம் கருத்தில் எடுப்பீர்கள் என நம்புகிறோம்.

நன்றி

கையெழுத்து .

ஒப்புதல்.